ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

# திராவிடநாடு

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0-0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 | காஞ்சிபுரம் 18—6—44 | இதழ் 15.

## இசையும் வசையும்.

*தில்லை, தமிழ்ப்புலவர் **நா. மு. மாணிக்கம்**, தமிழ்ப்பற்றுள்ள வீர இளைஞர். மாணவப் பருவ முதற் கொண்டே இந்த மாண்புடன் விளங்கி இன்று ஆசிரியராக அமர்ந்து, இந்த ஆர்வத்தை மற்றவர்க்கு ஊட்டிவருகிறார். ஆரிய நச்சு எங்கெங்கு எவ்வெவ்விதத்திலே கலந்துளது என்பதைத் தெள்ளிதின் விளக்கி, **இசையும் வசையும்** என்ற தலைப்பிலே குடந்தை திராவிடமாநாட்டிலே விரிவுரையாற்றினர். அது, இது.*

தலைவர் அவர்களே! திராவிடர் கழக உறுப்பினர்களே! பெரியோர்களே! இன்று யான் தங்கள் முன்னிலையில் பேச எடுத்துக்கொண்ட பொருள் இசையும் வசையுமாகும். பொருளைக் குறித்துப் புகலுவதற்கு முன்பு, எனக்கு விதித்த தடையைக் குறித்து இயம்பாதிருக்க இயலவில்லை. வகுப்பு வேற்றுமையை வளர்ப்பதற்கான மொழிகளைப் பேசவேண்டாமென யான் இங்குள்ள கல்லூரித்தலைவர் பெயரால் தடைசெய்யப்பட்டிருப்பதையே குறிக்கின்றேன். கல்லூரித் தலைவர் இம்மாதிரி தடைவிதிப்பதற்கு எற்ற காரணங்கள் சிறிதும் இல்லை என்பது என் கருத்து. ஏனெனில் பிறர்வகுப்பு வேற்றுமையோடு செய்யும் செயல்களை எடுத்துக்காட்டுவதாக என்பேச்சு அமையுமே, மொழிவகுப்பு வேற்றுமையை உண்டாக்குவதாக என்பேச்சு அமையாது என்பதை முதலிற் கூறிவிடுகின்றேன். அதனை மாறுபாடாகக் கருதின் கருத்துப் பிழை எனக்கூறலாமேயன்றி வேறல்ல. மேலும் கல்லூரித்தலைவர் அவர்களால் பல ஆண்டுகள் வகுப்பு ஒற்றுமையோடு கற்பிக்கப்பட்டு வந்த கல்வி, எனது சிறிய காலச்சிற்றுரையால் சிதைந்துவிடும் என்று நம்புவது அவர்களுக்கே தகுதியின்று என்பதும் எனது தாழ்வான எண்ணம்.

பெரியோர்களே! ஒரு நாட்டிற்கு "இசையும், வசையும்" எவரால் உண்டாகும் என ஆராய்வதும் இத்தலைப்பின் ஒரு பகுதியாகும். நம் திராவிட நாட்டினரை பொறுத்தவளவில், "தோன்றிற் பழியொடு தோன்றுக" என்று கூறியிருப்பின் பொருத்தமாக இருக்கும் என்பது என் கருத்து. ஏனெனில் திராவிட நாட்டாராகிய நாம் பிறந்த பிறப்பாலேயே பழியொடு பிறந்தவர்களெனக் கருதப்பட்டும் ஆளப்பட்டும் வருகின்றோம். மேலும் நம்மில் பாடுடையநிலையை, புரட்சிக்கவி பாரதிதாசனின் கருத்திற்கொப்ப நாயினுங்கேடாய் உள்ளது என்பதைக் கூர்ந்து பார்ப்பின் விளங்காமற் போகாது. நாயெனும்போது எச்சிலிலைக்குப் போட்டியிடும் நாயென்பதை நினைவு கொள்ள வேண்டும். இந்த இழிந்த நிலை இத்திராவிட நாட்டிற்கு என் உண்டாயிற்று? இயற்கைப்பொருள்களின்பெருக்கமில்லாததினாலா இக்குறைபுண்டாயிற்று? பாடுபட்டுழைக்கும் பாட்டாளி மக்கள் இல்லாததினாலா இக்குறையுண்டாயிற்று? இல்லையே. பொருளும் உழைப்பும் இருந்தும் என் இக்குறைபாடு?

பொருட் பெருக்கம் உடையநாடு வறுமையுற்றதுபோல் வாட்டமடையக் காரணமென்ன? பிறநாடுஆட்சி என்பர் நமது பெருமதிப்பிற்குரிய தேசியவாதிகளென்போர். அஃது ஓரளவு உண்மையாயினும் அதனையே முழுஉண்மை எனலாமோ? உழைப்பாளிகளின் பயனை உறிஞ்சவல்ல வடநாட்டார் தொகுதியும், இந்நாட்டு முதலாளி இனங்களின் தொகுதியும், பிறிதொரு காரணமுமாகுமன்றே. இவ்விரு காரணங்களுக்கும் உட்காரணமாய் இயங்கியது அல்லது இயங்குவது எது? வரலாற்றறிஞரும் பிறரும் கூறுதல்போல் பார்ப்பனர்களே அதற்குஉட்காரணம் என்பதைநாம் மறக்கமுடியுமா? பிறநாட்டாட்சிக்கு வழிகோலியவர் பார்ப்பனர்களே யாவர் என்பதை இளந்தலைவர் அண்ணாத்துரை அவர்களால்பன்முறையும் நாம்வரலாற்று நூலின் சான்றுகளோடு கேட்டிருக்கிறோம். பிராயச்சித்தம் முதலாகியபன்னெறிகளைவகுத்து மனச்சாட்சியைக் கொன்று வாழுமாறு முதலாளி இனத்தை வளர்த்துவருவதும் பார்ப்பனியமேயாகும் என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அந்நியநாட்டார் ஆட்சிக்கும் முதலாளி இன வளர்ச்சிக்கும் ஆக்கந்தேடும் பார்ப்பனச் சமூகம், இந்நாட்டு மக்களின் உழைப்பின் பயனை எவ்வாறு விழுங்கிவந்திருக்கின்றது என்பதை எண்ணுவார் உள்ளம் கொதிப்படையாதிருக்குமோ? ஒரேஒரு எடுத்துக்காட்டு. இக்காலத்தில் நாம்பார்ப்பனர்களுக்குப் பலபொருள்களைத் தானம் என்றபெயரால் பிறப்பு முதல் இறப்பு வரை வழங்கி வருகின்றோம். அவற்றுள் மிகச்சிறிய தானம் எது? ஆற்றிலோ குளத்திலோ தலைமுழுகி அய்யருக்கு அரையணாவைத்தட்சணை என்றபெயரால் கொடுக்கின்றோம். இந்நிகழ்ச்சி பழங்காலத்தில் எவ்வாறு நடந்திருக்கின்றது என்பதை உணர்த்தும் இச்செய்யுள் கேளுங்கள்.

தண்புனல் ஆட்டின் தக்கணை யேற்கும்
அந்த ணாள ரடைக விரைச்செனப்
பயிணா லாளரைப் பயிர்வனர் கூஉய்க்
கவர்வனர் போலக் காதலி னுய்த்து
நன்கல மேற்றி நாளணி யணிந்து
மங்கல வேள்வியுள் மகளீ வோரும்
செம்பொற் புரிசை வெண்சுதை மாடத்
துழைக்கலம் பரப்பி யுருவிய மகளிரோ
பிழைக்கல நிறீஇ யில்லீ வோரு
மாலைக் கரும்பு மரியறு செந்நெலும்
பாளைக் கமுகின் படுவுஞ் சுட்டிப்
புயல் சேணீக்கினும் பூவளங் குன்று
வயலுந் தோட்டமும் வழங்கு வோரும்
நாகுரு னீங்கிய சேதாத் தொகுத்துக்
குளம்புங் கோடும் விளங்குபொன்
னுறீஇத்
தளையுந் தாம்பு மளைகடை மத்துங்
கழுவுங் கலனும் வழுவில பிறவும்
பைம்பொனி னியன்றவை பாற்பட
வகுத்துக்
குன்றுக் கோடி கொடுத்தவப் போடு
பின்னவை பிறகு..............

எனவிளக்கும் பெருங்கதையானது ஏனையதானங்கள் எவ்வளவில் நடந்துவந்

(2ம்பக்கம் பார்க்க.)

# இசையும், வசையும்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கவேண்டுமென்பதை நாம் ஊகித்துக்கொள்ள இடந்தருகின்றதன்றோ.

ஆகவே அன்னியஆட்சி, முதலாளி இனத்தின்வளர்ச்சி ஆகிய இரண்டிற்கும் உட்காரணமாய் ஒளிரும்பார்ப்பன ஆட்சி தன்னை வலுப்படுத்திக்கொள்ளுதற்கே அவ்விரண்டையும் கருவியாகக்கொண்டுள்ளது என்பது தெற்றெனவிளங்குகின்றதன்றோ! ஆனால் நாம் வெறுப்பது பார்ப்பன ஆட்சி பல வகையாகப்பொருளைப்பறித்துண்டு வாழ்கின்றது என்ற ஒருகாரணத்திற்காக மட்டுமன்று; ஆங்கிலேயர்கள் பார்ப்பனர்களால்பெற்ற அரசுரிமையை இந்நாட்டில் என்றும் நிலவிட, தங்கள் இங்கிலீஷ் மொழியை ஏற்றதெனக்கொண்டு அதனையே அரசியல் மொழியாக்கி ஆட்சியை வலுப்பெறச்செய்தனர் என்பது நாம் அனைவருமறிந்த உண்மையாகும். இவ்வுண்மையை ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு இந்நாட்டிற்குக் குடிபுகுந்த ஆங்கில இனத்தாராகிய ஆரியரும் அறிந்தனர். தங்கள்மொழியை இந்நாட்டில் நிலவச்செய்யவேண்டும் எனஎண்ணினர். தங்கள் மொழியைத்தேவபாடையெனச் சாற்றினர். வேதங்களும் ஆகமங்களும் விதவிதமான உபநிடதங்களும் வித்தகன் அருளிச்செய்தவை எனவிளம்பினர். காலம் உருண்டது. கல்வியைக் கற்கத் தமக்கே உரிமைஎன்றனர். உரிமை அழியாதிருக்க ஊராரிற் பலரும் ஒத்துழைத்தனர். அவர்கள் வாக்கே வேதவாக்கெனவும் அவர்கள் செயலே தெய்வச்செயலெனவும் நம்புமாறு இவர்களும் நடித்தனர்.

நிற்க, அறிஞரெனமதிக்கும் சிலர்ஆரியரைத்திட்டுகின்றாயே அவர்கள் இந்நாட்டில் நூற்றுக்கு எவ்வளவுபேர்! இக்காலத்திலும் நூற்றுக்கு மூவரோ நால்வரோ தானே இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஆதிக்கம் இருக்கிறதென்றால் அதற்கு அவர்களாகாரணம் என்பர். தோழர்களே! சிறுகூட்டம் பலரை மனம்பதைக்கச்செய்யும் என்பதை நம்பெரியாரவர்கள் "சந்தையும் அயோக்கியர்களும்" என்ற கதைகொண்டு விளக்கிக்காட்டுவதை நாம் கேட்டிருக்கின்றோம். எண்ணிடக்கூடிய ஆங்கிலேயர்களால் எண்ணுதற்கரியஇந்நாட்டு மக்களாகிய நாம் ஆளப்பட்டுவருகின்றோம் என்பதும்அவர்கள் உணர்கின்றார்களில்லை. ஒரு குடம் பாலுக்கு அதன் தூய்மையைப்போக்க ஒருதுளிநஞ்சே போதுமானது என்பதையும் மறந்துவிடுகின்றனர். இவ்வாரியர்கள் நூற்றுக்கு மூவர் அல்லது நால்வராக இருப்பதேபெரிதும் ஆச்சரியப்படவேண்டியதொன்று. இந்நாட்டிற்கு அக்கூட்டம் ஈராயிரம் (பழனி) மூவாயிரம் (தில்லை) எண்ணாயிரம் (அண்ணாமலை) எனத்தொகுதி தொகுதியாக இறக்குமதியாக்கப்பட்டிருந்தாலுங்கூட, தங்கள் இனத்தை இன்னும் பல படியாகப் பெருக்கவேண்டும் எனஎண்ணினர். பல பெண்மகளிரைத் தானமாகக்கொண்டனர் என்றசெய்தியை முன்பே கூறியுள்ளேன். தம்இனத்தைப் பெருக்குவதற்குப்பல (ஊர்பெயர்இனம்அறியப்படாத) ஆண்குழந்தைகளை எடுத்தும் வளர்த்திருக்கின்றார்கள் என்ற உண்மையை மணிமேகலை என்ற தமிழ்க்காவியம் நமக்கு உணர்த்துகின்றது. அக்காவியத்திலே நான்கு சான்றுகள் இதற்குக் காணப்படுகின்றன ஒன்றைமட்டும் கூறுகின்றேன். வாரணசி என்றஊரில் வேதாசிரியன் மனைவி சாலினியென்பவள் தன் கூடாவொழுக்கத்தால், கருக்கொண்டாள். வேதத்துறைவல்ல வித்தகராம் அந்தணர் கன்னியாகுமரிசென்று தலைமுழுகிக் கருமத்தைக் கழிஎனக்கட்டளையிட்டார். கட்டளையைஏற்று கானகம்பல கடந்த காரிகையாள் அக்கானகத்திடையே மருவுயிர்த்தாள். ஈவிரக்கமின்றி இப்பீடை ஒழியட்டும்என சபித்து இறுகிய மனத்தினளாய்தனியே இட்டுச்சென்றாள். இதுதான் உண்மை- ஆரியப் பெண்களின் இயல்புபோலும். அக்குழந்தையை ஆ வொன்றுகண்டு அன்னையின் உள்ளத்தோடு அருகில்நின்று தன்நாவால்தடவி அமுதினையும் சொரிந்ததாம். அதைக்கண்ட பார்ப்பனன் ஒருவன் அக்குழந்தையை எடுத்துச்சென்று ஆபுத்திரனெனப் பெயரிட்டு வளர்த்தானாம்.

மொந்ததமிழினத்தை ஏற்றவாகனமாகக்கொண்டு ஏறிப்பவனிவந்த ஆரியர்கள் கல்வியைப்பிறர் கையாளவொட்டாமல் செய்தது மட்டுமன்றி பலகட்டுரைகளை இடைஇடையே, கட்டியும் வைத்துவிட்டனர். இந்நாடே இந்நாடல்ல என்ற உணர்ச்சியைப் பரப்புதற்கு நாவலந்தீவு—பாரதநாடு எனப்பொருந்தாத பலபெயர்களை இட்டுவழங்கினர். நாடுமட்டுமல்லாமல் தமிழர்கள் வாழுகின்ற ஊர்களையும் மாற்றினர். அவ்வுண்மையை நீங்கள் அடிக்கடிகேள்விப்பட்டிருப்பீர்கள். நாட்டையும் ஊரையும் மாறுபடுத்தியதல்லாமல் இந்நாட்டுமக்களே குடியேறியவர்கள் அதுவும் ஆரிய அகத்தியர்தான் குடிஏற்றினார் என்றும் எழுதிவைத்து விட்டனர். "துவாரகாபதியுள் சென்று பதினெண் கோடி வேளிர்உள்ளிட்ட அருவாளாளரை அழைத்துவைந்து காடுகெடுத்து நாடாக்கி" அகத்தியர் குடிஏற்றினர் என ஆரியக்கொழுந்து நச்சினார்க்கினியன் (உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியன் மனந்துணிந்து, தொல்காப்பியவுரையில் எழுதியும் வைத்துவிட்டான். மக்கள் மட்டுமன்று. சேரசோழ பாண்டியர்களும் அவ்வாறு குடிஏற்றப்பட்டவர்கள்தானாம்! நம்நாட்டிற்கு அழகையும் பெரும்பயனையும்) நல்கவல்ல காவிரியாறு கங்கையிலிருந்து கொண்டுவரப்பெற்றதாம். கருடன் கூறும் கட்டுக்கதையினை-அறிவுடை உலகம் கொள்ளுமா என்பதைப்பாருங்கள். வடகோடிதாழ்ந்து தென்கோடி உயர்ந்துபோக அதைச்சமன்செய்ய, அகத்தியனை அனுப்பிவைக்கின்றார் சிவபெருமான். மங்கை-மணாளா! மலையரசன் மருகா! உன்னைத்துதிக்க என்உடம்பழுக்கைப் போக்க நான்எங்கு சென்றுநீராடுவேன் கங்கையில்லாமல் எனக்கதறினன். சிவபெருமான் கங்கைப்பெண்ணை அழைத்தான். அகத்தியன் கையிலிருந்த கமண்டலத்தில் நுழைஎன்றான். அதனை அகத்தியர்தாங்கிப் பலகாடுகளை யெல்லாம் கடந்து, தென்னாட்டிற்கு வந்துசேர்ந்தவிடத்து, ஒருநாள் நியமநிஷ்டையிற் கண்ணயிருக்க, காக்கையொன்று கமண்டலத்தைக் கவிழ்க்கவே அதுதான் காவிரியாறாக ஓடத்தலைப்பட்டதாம.இப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கிறதாம். இக்காவிரிமட்டுமன்று, வைகையாறுங்கூட இந்நாட்டிற்குரிய ஆறு அல்லவாம். அதுவும் சிவபெருமானாலே இந்நாட்டிற்கு மேலுலகிலிருந்து வரவழைக்கப்பட்டதாம். இவ்வாறு கல்வியை ஆளும்உரிமை தமதெனக்கூறிய ஆரியர் நாட்டையும் ஊரையும், மக்களையும், அரசரையும், ஆற்றினையும் மாறுபடுத்தி அலங்கோலப்படுத்திய அளவில்திருப்தியடையாமல், இந்நாட்டுப் புலவர்களையுங்கூட ஆரியப்பார்ப்பனருக்குப் பிறந்தவர்கள் என்று கூறவுந் தலைப்பட்டனர். அதனை இந்நாட்டுப்புலவரென்போரும் ஏற்று, மாணவர்களுக்குப் பாடமாகவும் கற்பித்து வருகின்றனர். வள்ளுவர்-ஒளவையார் இவர்கள் அனைவரும் எவ்வாறு பிறந்தனர் என்றவரலாற்றை நீங்கள்படியாது, கேளாது போனாலுங்கூடப், படத்தின் வழியாகப் பார்த்தாவதிருப்பீர்கள். தமிழனின் தலைசிறந்த நூலாகக்கருதப்படும். தொல்காப்பியத்தை (பலஇடைச்செருகுகள்இருப்பினும்) ஆக்கிய தொல்காப்பியனார் சாக்ஷாத் ஆரியப்பார்ப்பனராம். அவருக்குப் பழையபெயர் திரணதூமாக்கினியாம். இந்த மாறுபாட்டால் தமிழ்நாடு இப்பொழுது எந்நிலைமையை அடைந்துவிட்டது! உண்ணுகின்ற உணவும், பருகுகின்ற நீரும், உடுக்கின்ற உடையும் பிறமொழிச் சொற்களாலேயே குறிக்கும்படியான இழிநிலை அடைந்து விட்டதல்லவா? இவ்விழிநிலைக்கு ஆக்கிய ஆரிய இயல்பினைத்தான் நாம்வெறுக்கின்றோம். மானம் இழந்து, மதியிழந்துவாழ வகைபலவகுத்தவன்கணாளரின், போக்கினைத்தான் நாம் வெறுக்கின்றோம். இந்நாட்டுக்குரிய நம்மை உரிமையற்றவர் போலாக்கி உழைப்பின்பயனை உண்டு கொழுக்கும் பார்ப்பனியத்தைத்தான் வெறுக்கின்றோம். இதனை எவரும் குற்றமெனக் கூறுதற்கு இயலுமா?

எழில்நலம் நிரம்பிய இயற்கைப் பொருள்மலிந்த இந்நாட்டு மக்கள், மாட்

(7-ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை,

★

சௌமியன்.

# பார்வதி பி.ஏ;

கதை கற்பனையே, கதையில்வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

[முன்பு:-லேடி ஆலாலசுந்தரர், அறிமுகப் படுத்தப்படுகிறர். அவருக்கு வாரிசாகவர இருக்கும பார்த்திபன் எனும வாலிப வாய்வீரனுக்குக் காதலி பார்வதி B. A; இவள் ஓர் இலட்சியவாதி. குமார் எனும் பாட்டாளி, பார்த்திபனுடைய பிரசங்கத்தில் இலயிக்கிறன. குமார் பொதுப் பணத்தைக் கொள்ளையடித்து மறைந்து விட்டதாகப் பத்திரிகையிலே செய்தி. பார்வதி கவலைப் படுகிறள். உத்தமி என்பவளின் சிநேகிதத்தால் பார்வதிக்கு டைபிஸ்ட் வேலை கிடைக்கிறது. பார்த்திபனல் 'ரட்சகன்' என்னும் பத்திரிகை நடத்தப்படுகிறது. தங்கள் குமாரநபரர், பார்த்திபனுக்கும் ஜெயத்துக்கும் சிநேகிதம் உண்டாகும்படி வேலைசெய்து மகிழ்ச்சியடைகிறர். இதற்கிடையே பார்வதியின் தோழி, உத்தமிக்கு நரசிம்மன் என்பவன் காதலனகிறன். பார்த்திபன், கதகளி நடனம் பார்க்கக் கேரளம் செல்கிறன். உத்தமி கருவுற்றுள். நரசிம்மன், குமுதினி என்பவளைக் கலியாணம் செய்துகொண்டு, உத்தமியைக் கைவிடுகிறன், குமுதினியின் உதவியால் உத்தமி பெங்களூர் செல்கிறள். அந்த குழப்பத்துடன் ஓர் மாநாடு நடைபெறுகிறது. பிறகு.......]

மகாநாடு குழப்பத்திலே முடியவே, பார்த்திபன் கடுங்கோபங்கொண்டான். பார்வதியைச் சுட்டுக்கொன்றுவிடவேண்டும் என்று நினைத்தான், சட்டம் சும்மா விடாதே என்று கருதிப்பயந்தான். வேடதாரிகள். மக்கள் பெயரைக் கூறிக் கொண்டு, பொதுநலத்தொண்டு என்று பெயர் வைத்துக்கொண்டு ஏய்ப்பது, இதுபோலத் தடுக்கப்படத்தான் வேண்டும் என்று சிலர் பேசலாயினர். அம்பக் ஆறுமுகம், வெண்ணெய் திரண்டு வரும் சமயத்திலே தாழி உடைந்த கதைபோலாயிற்றே என்றெண்ணி விசனித்தான். ஆலயதர்மகர்த்தாக்கள், தத்தமது மனக்கோட்டை இடிந்ததுபற்றி வருந்தினர். பத்திரிகை நிருபர்கள் விதவிதமான தலைப்புகள் கொடுத்துச் செய்திச் சித்திரங்களைத்தீட்டச் சம்பவம் வாய்ப்பு அளித்ததே என்றெண்ணி மகிழ்ந்தனர். ஆலால சுந்தரர், "நான் ஆயிரம் தடவைசொன்னேன் வேண்டாம், வேண்டாமென்று, இந்தப்பார்த்திபன் என்சொல்லைக்கேட்கவில்லை. இவ்வளவும் இவனுல் வந்த தொல்லை" என்றுகூறி விசனித்தார். மாநாடு குழப்பத்திலே முடிந்ததால் பலருக்கு ஏற்பட்ட மனக்கஷ்டத்தைவிட கலாரசிகர் கனகசபேசருக்கு ஏற்பட்ட கஷ்டமே அதிகம். "விரிவாக விளக்கமாக, முத்தமிழின் மணம்கமழ வித்தகரின் உரைகள் மிளிர, புதியதத்துவார்த்தங்கள் நிரம்பிய சொற்பொழிவைத் தயாரித்தேன், வீணுயிற்று" என்றுகூறி அவர் விசாரப்பட்டார். எத்தனை ஏடுகளைப் புரட்டினேம், என்னென்ன பாடல்களை இணைத்தோம், எப்படியெப்படிப் பொருள்விளக்க முறைத்துள்ளோம், இப்படிப்பட்ட இனிய உரையை இதுவரை பெங்களூரிலே எவரும் கேட்டிருக்கவே முடியாதே. தமிழகத்திலேயே இவ்வளவு அருமையான விரிவுரையை நிகழ்த்தவல்லார் வேறு எவருளர். பலருக்குப்படிப்பு உண்டு, பண்பாடு கிடையாதே! இலக்கண இலக்கியம் தெரிந்தோர் பலர் இருக்கின்றனர், ஆனால் ரசம் கண்டு அனுபவித்ததை மக்கட்கு எடுத்துக்கூறிடும் வகை உணர்ந்தார் யாருளர்! கலையின் மேம்பாட்டினை மக்கள் உணரும்வாய்ப்புத் தவறிவிட்டதே என்று எண்ணி ஏங்கினர் கலாரசிகர் கனகசபேசர்.

லேடி டாக்டர் லலிதகுமாரி, மகாநாட்டுவிஷயமாகப் பார்வதி கூறியது கேட்டுச் சிரித்தாள். "பார்வதி! ஒரு சிறுக்கி. நீ ஒருபெரிய மாநாட்டையே கலைத்துவிட்டு வந்துவிட்டாயே, எவ்வளவு தைரியமடி உனக்கு" என்று கூறி இதற்கு ஒரு பாராட்டா? அவர்கள் மாநாடுகள் நடத்திப் பழக்கப்பட்டவர்களுமல்ல, மக்களிடம் தொடர்பு கொண்டவர்களுமல்ல, ஒரு மாநாட்டை எப்படி நடத்தவேண்டுமென்பதே தெரியாததால் தான், அந்தக்குழப்பம் உண்டாயிற்று" என்று கூறினுள். "இப்படியே எத்தனை காலம் பொதுநலத்தொண்டு, கட்சிவேலை என்று இருக்கப போகிறுய்? பார்வதி! உலகமக்கள் அனைவரும் சுகம்பெற்ற பிறகுதான் கலியாணம்செய்து கொள்வது என்று ஏதாவது சபதமா?" என்று லேடிடாக்டர் கேட்டாள். "உனக்கு எப்போதும் கேலிதான் வேலை" என்று பதிலுரைத்தாள் பார்வதி. வாய்கூறியதுஅவ்வளவுதான், ஆனல் மனமோ, கோடைக் கானலிலே, குமார் முழக்கமிட்டது. அதைக்கேட்ட பார்த்திபன் பொருமைப் பட்டது ஆகிய விஷயங்களிலே சென்றது. பார்த்திபன் மாநாட்டை வெற்றிகரமாக நடத்திஞல் என்ன நடத்தாமற் போனுலென்ன குமார் விஷயத்திலே வெற்றிபெற்றுவிட்டான். குமாரின் புகழ் ஓங்குமோ என்று பயந்தான், குமார் இருக்குமிடம் தெரியாமற் போகுமாறு செய்துவிட்டான். எங்குபோனுன்குமார்? அவன் தொழிலாளர்களுக்காகத் திரட்டிய பெரும்பொருள் என்னவாயிற்று? என்பது தெரிய மார்க்கமே இல்லை. இதை எண்ணிப் பார்வதி விசனமுற்றுள். குமார், நம்பிக்கை மோசடி செய்யக்கூடியவனென்று பார்வதியால் நம்ப முடியவில்லை. பாட்டாளி மக்களிடம் அவன் காட்டிய அக்கரையை அவள் அறிவாள். பார்த்திபனைப்போலப் படாடோபக்காரனல்ல. தலைமைப் பதவிபெறச் சதிபலபுரியும் நோக்கமேஇல்லாத குமார், பொதுப் பணத்தைச் சூறையாடக்கூடியவனல்ல. தன் உயிரைக்கொடுத்தேனும், பாடுபடுவருக்குப் பணிபுரியவேண்டுமென்ற ஒரே இலட்சியத்திலே மூழ்கிய குமார் எங்கே சென்றுள்ளான், என் தலைமறைவாக இருக்கிறுன் என்று எண்ணி எண்ணி ஏக்கமுற்ற பார்வதி, பார்த்திபனுக்குத்தான் இந்த மர்மம் தெரியவேண்டும். அவனிடம் வீணுக விரோதித்துக் கொண்டதே தவறு. தந்திரமாக நடந்து கொண்டு, பார்த்திபன் மூலமாகக் குமாரைப்பற்றிய தகவலைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்துப் பார்த்திபன் தங்கியிருந்த விடுதிக்குச் சென்றுள்.

மகாநாடு குழப்பத்திலே முடிவதற்குக் காரணமாக இருந்ததுபோதாதென்று கேலிசெய்யவும்துணிந்து பார்வதி வந்திருக்கிறுள் என்றுநினைத்த பார்த்திபன், வேல்பாய்ந்த வேங்கைபோலச் சீறினுன். ஆணவமும் அட்டகாசமும்கொண்ட சொற்களைவீசலானுன். வழியற்றவள், நிலைகெட்டவள் என்று பார்வதியைத் தூற்றினுன். பார்வதி, அவனுக்குப்பதிலுரைக்கவில்லை. கோபமும் கொண்டதாகக்காட்டிக்கொள்ளவில்லை. புன்சிரிப்புடனேயே பேசினுள். "மன்னிக்கவேண்டும்! நான் ஓர் ஏழை! என்மீதுகோபித்துக்கொள்ளலாமா! தங்கள் சக்திக்குமுன்னுல் நான் எம்மாத்திரம்!" என்ற தொடர்களையே பதிலாகஉரைத்தாள். அவளுடையஅமைதியானபோக்கும் பணிவானபேச்சும், பார்த்திபனுக்குக் கோபத்தைக் கிளறிவிடவே உதவின. பதிலுக்குப்பதில், பார்வதியும் கோபமாகப்பேசி இருந்தாலாவது, ஆத்திரம்தீர அவளைப்பேசி ஒருவாறு திருப்திபெறலாம். அவளோ அடக்கமே உருவானவள்போல இருந்திடக் கண்டான். அவனுக்கு அந்தநிலையின் காரணம் விளங்கவில்லை. கைகளால் தலை

(5-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு.

காஞ்சி 18—6—44 ஞாயிறு


## அந்த நாளில்!

"ஆட்டவாவிலே, நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டார். பிரிட்டிஷாரின்குலாமாக இருந்து நாட்டுக்குத் துரோகம் செய்துவிட்டார். நாட்டைக் கெடுத்த சண்முகத்துக்கு ஓட்டளிக்காதீர்" என்று ஆரியர் ஆர்ப்பரித்து, அறிஞர் சர். R. K. சண்முகம் அவர்கள்மீது சீறிப்பாய்ந்தது சில ஆண்டுகளுக்கு முன்பு.

இந்திய சர்க்காரின் பிரதிநிதியாக, கனடா நாட்டிலே ஆட்டவா என்ற நகரிலே நடைபெற்ற மாநாட்டுக்குச் சென்றிருந்தார், பொருளாதார நிபுணரும் அரசியல் அறிஞரும் சுயமரியாதைத் தலைவருமான. சர். R. K. சண்முகம். சுற்றிலும் ஆரியம்! எங்கும் ஆரியப் பத்திரிகைகள்! ஆரியத்தின் ஆட்சி! இதனிடையே உலவினார் சர். சண்முகம். தமது திறமையால் எதிர்ப்புகளை முறியடித்தார், திராவிடனுக்குத்தக்கதோர் பணிபுரியத் தெரியுமென்பதை ஆரியருட்படச் சகலரும் தெரிந்துகொள்ளுமாறு வேலைசெய்தார், வெற்றிபெற்றார். இதைக்கண்ட ஆரியத்தின் குலைநடுங்காதிருக்குமோ! சர். சண்முகத்தைச் சாய்க்காமல் தூங்குவதில்லை என்று சபதமிட்டது, சல்லடம் கட்டிக்கொண்டு வெளிப்பட்டது, மேடை அதிரப்பேசிற்று, பத்திரிகைகள் வழிய எழுதிற்று, சர். சண்முகத்தைக் கண்டித்து.

பொருளாதாரத் துறையிலே சர். சண்முகத்தின் போக்கு நாட்டுக்குக்கேடுபயக்கக்கூடியது என்று பேசியவர்களுக்கு, மாநாடு கூடிய இடத்தின் பெயர் ஆட்டவா, என்று சரியாக உச்சரிக்கவும்தெரியாது ஒட்டாவா என்று உளறினர். அந்த உளறலால் ஊரை ஏய்க்கவும் முடிந்தது. தற்குறித்தனம் அதிகம் உள்ள இந்நாட்டிலே மக்கள் உரத்த குரலோரின் உளறலால், ஏமாறுவது சகஜம். சண்முகத்தின் எதிரிகள் வெற்றிபெற்றதும் சகஜமே!

ஆட்டவா, போல இதுபோது ஓர் மாநாடுகூட இருக்கிறது. அமெரிக்கக் குடியாட்சித் தலைவர், ரூஸ்வெல்ட், வாஷிங்டன்நகரிலே, உலகநாணயத்திட்ட மாநாடு கூட்டுகிறார். இதற்குச் சர் சண்முகமும், ஷராப் என்ற பிரமுகரும்,பிரதிநிதிகளாகச் செல்கின்றனர். போருக்குப் பிறகு உலகில் பல்வேறு நாடுகளிலே, பொருளாதாரத் திட்டம், குறிப்பாக நாணயச்செலாவாணித்திட்டம் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதனைத் தீர்மானிக்கும் மிகமுக்கியமான பொறுப்பு,இம் மாநாட்டிலே உளது. இதற்குத் தகுதி வாய்ந்தவரே சர். சண்முகம், ஆனால் என்ன இருந்தாலும் அவர் ஐயரல்லவே!! எனவே ஆரியத்திற்குக்கசப்பாகத்தான் இருக்கும், பொறாமையைக் கக்கித்தான் தீரும், பொச்செரிப்பைக்காட்டிக்கொள்ளாதிருக்க முடியாது.

இதனை நன்கறிந்த சர். சண்முகம். கோவையிலே சென்ற கிழமை பேசுகையிலே, "அந்நாளிலே ஆட்டவாவிலே நான், நாட்டுக்குக் கேடுசெய்தேன்என்று நாப்பறை அறைந்தனர். அதனை எண்ணும்போது, மறுபடியும் ஒரு மாநாட்டுக்குச் செல்லவேண்டி இருக்கிறதே.என்னென்ன பழிச்சொல் வருமோ என்று எண்ணி நடுங்கவேண்டி இருக்கிறது. நல்லவேளையாக, நிபுணர் ஷராப் அவர்கள் உடன் வருகிறார்" என்று கூறினர். ஆரியத்திடம் திராவிடத் திருமகனார்கள் எவ்வளவு அஞ்சவேண்டி இருக்கிறது என்பதற்குச் சர். சண்முகத்தின் பேச்சு சரியானதோர் எடுத்துக்காட்டாகும்.

'நாட்டுக்கு உகந்தது என்றபட்டதை நான்செய்வேன்,நிந்தனை, நாவாணிபரின் தூற்றல் ஆகியவற்றைப் பொருட்படுத்தப் போவதில்லை" என்று வீரமுழக்கம் புரிந்தார், வியாபார வேந்தர் சர். சண்முகம். திராவிடப்பண்பு அச்சொல்லிலே மிளிரக் காண்கிறோம். அச்சம், தயை தாட்சணியம் என்பவைகளைப் பொருட்படுத்துவோரால் அணுவளவும் நற்காரியம்புரியமுடியாது. புகழ்தேடித்தொண்டு புரியப்புறப்படுவது மலர்தேடி மலையுச்சி ஏறுவதை ஒக்கும். கடமையைச்செய்கையிலே கைகுலுக்குவோர் எதிர்ப்படினும் சரியே கட்கத்தால் மார்பினைப் பிளந்திட வரும் மாற்றார் எதிர்ப்படினும் சரியே, கலங்கலாகாது என்பது சர். சண்முகத்துக்குத்தெரியும். ஆட்டவா மாநாட்டுச் சமயத்திலே ஆரியம் அவரை நாக்கிலே நரம்பின்றிக் கண்டித்தபோது, அவர்நிலை குலையாது நின்றார்.

இதுபோது அவர் ஆற்றவேண்டிய கடமையும் அவர் அறிந்ததே. இந்தப்போரின் பயனாக, இரத்தமும் வியர்வையும் சிந்தி, இராப்பட்டினி பகல்பட்டினிகிடந்து, இந்த உபகண்டத்துக்கு மக்கள் உழைத்த தன் பலனைச் சுமார் 1500 கோடி ரூபாய் பிரிட்டன், இந்தியாவுக்குத் தரவேண்டியநிலைமை ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டன்இந்தியாவின் கடன்காரநாடாக இருப்பதா என்ற எண்ணம், பலபிரிட்டிஷாருக்குக் கவலையையும் சிலருக்குத் துவேஷத்தையும் உண்டாக்கிவிட்டது. கீன்ஸ் பிரபுபோன்ற பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர்களின் பேச்சிலே பொச்செரிப்புக் காணப்படுகிறது. வாஷிங்டனில் கூடஇருக்கும் மாநாட்டிலே, இந்தக் கடன் எந்தவிதத்திலே பைசல்செய்யப்படவேண்டும் என்பதுபற்றிய பிரச்னை பேசப்படும். இதுகுறித்து முன்போர் முறைநாம் எழுதுகையிலே, நாட்டுத் தொழில் வளத்தைப் பெருக்கக்கூடிய இயந்திர சாதனங்களைப்பெற, இப்பெருந்தொகையைப் பயன்படுத்தவேண்டும், வெறும்போகப் பொருள்கள் பெறுவதற்கு இதனைச் செலவிடுதல் நாட்டின் எதிர்காலத்தை மிகவும் பாதிக்கும்என்று எடுத்துக்காட்டினோம். பாரிஸ்பவுடரும், மான்செஸ்டர் மஸ்லீனும், ஈஜிப்ட்சுருட்டும் இலண்டன் சரக்குகளும் பெறுவதற்கு, பிரிட்டன், இந்தியாவுக்குத் தரவேண்டிய கடனைச்செலவிட்டால், மகத்தான கேடுதான். எனவே பிரிட்டன் இந்தியாவுக்குச் சேரவேண்டிய 1500கோடி ரூபாய்க்கும், உயர்தரமான, தொழில் வளத்தைத் தரக்கூடிய இயந்திர சாதனங்களும் விஞ்ஞானப் பொருள்களும் பெற வேண்டும். இதற்கான முறையைச் சர். சண்முகம், வாஷிங்டனில் எடுத்துரைக்க வேண்டும். அதுமட்டும் போதாது! எங்ஙனம், உலக அமைப்பிலே ஒருநாடு தொழில் வளத்திலே மிகமிக முன்னேறி மற்றநாடுகள் முன்னேறாதிருப்பது கஷ்டநஷ்டம் தருகிறதோ, அதுபோலவே உபகண்டமாகிய இந்தியாவை, ஒரே நாடு என்று பித்தலாட்டமாகப் பேசிக்கொண்டு, வடநாடு வளமாகிக்கொண்டே வரவும் தென்பகுதி அதன் மார்க்கட்டாகவுமான நிலைமை இன்று இருக்கிறதே இது ஒழியவேண்டும். திராவிடத்தின் இயற்கை வளமும் தொழில் திறமும், மாற்றாந்தாயிடம் சிக்கிய மக்கள்போன்று இருத்தலைச் சர். சண்முகம், அறியாதவரல்ல. அந்த நெஞ்சுநோகும் நிலையை, உணர்ந்து, இந்தியாவிலே தொழில் வளர்ச்சிக்கான திட்டங்கள் தயாரிக்கப்படும்போது, திராவிடநாட்டின் தனி நிலையை நன்குகவனித்து, இங்குதொழில் வளம் பெருகவழி வகை செய்யவேண்டும். இதனைச் சர். சண்முகம்செய்யாதிருப்பின், வேறுயார் இருக்கிறார்கள் செய்திட! வாஷிங்டனில் சர். சண்முகம், வாடிக்கிடக்கும் திராவிடஇனத்தின் விடுதலைக்கான விதத்திலே நடந்துகொள்ளவேண்டுகிறோம். ஆரியர் எதிர்க்கத்தான்செய்வார்கள். குள்ளநரிச்செயல் புரியும் கூட்டத்தின் கூற்றமென விளங்கும் ஆற்றல் உண்டு சர். சண்முகத்துக்கு. அவர் ஆரியத்தின் அடிவருடிய கம்பனின் இராமாயணத்தை ஆதரிக்கிறாரோ கஸ்தூரிபாய் நிதிக்குப் பணம் தருகிறாரே, என்பதற்காக ஆரியம் அவரை வாயாரப் புகழுமேதவிர, மனமார எண்ணுவது வேறுவிதமாகத்தான் இருக்க முடியும்! சமயம் பார்த்துச் சாய்க்க வேண்டும் என்றே ஆரியம் இருக்கும். ஆனால் அந்நாளிலே எங்ஙனம் ஆரியம் அவரை எதிர்த்தபோது, சுயமரியாதை இயக்கம் சர். சண்முகத்தின் பக்கநின்று பணிபுரிந்து ஆரியத்தின் கொட்டத்தைத் தாக்கிட உதவிற்றோ அதுபோலவே இன்றும் இருக்கும் என்பதைச் சர். சண்முகம் அறிய வேண்டுகிறோம்.

சர். சண்முகம் வேண்டுமானால் வேதியர்புகழும், ஆரியர்மகிழும்,இராமாயண

தைத்தாங்கவும், திராவிடத்தை அழிக்கும் தருக்கருக்கு உதவிடும் காங்கிரசுக்குக் கஸ்தூரிபாய் நிதி என்ற பெயரால் திரட்டப்படும் நிதிக்குத் துணைபுரியவும் முற்படுவாரே தவிரத் தன்மான இயக்கத் தோழர்கள் மட்டும், என்றும், சர். சண்முகத்தை மட்டுமல்ல, வேறுஎந்தத் திராவிடர்மீதும் ஆரியம்போர் தொடுத்தால், திராவிடரின் படையாகவே நிற்கும்.இது தன்மானத் தோழர்களின் தளராப்பண்பு திராவிட இன எழுச்சியின் மாண்பு!

வாஷிங்டன் சென்று, வாகை சூடி திரும்புக என்று வாயார மனமார நாம் சர். சண்முகத்திற்குக் கூறுகிறோம்.

## பார்வதி பி. ஏ;

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

யிலேஅடித்துக்கொண்டான். மேஜையை ஓங்கிக்குத்தினன். கூண்டிலிட்ட புலி போல உலவினன். மேலும் மேலும் வசைமொழி புகன்றான். பார்வதி, இந்தக்கோபத்தைப் பொருட்படுத்தாதது கண்டு, அவனுக்கு அழுகையும் வரும் போலிருந்தது.

"கள்ளி! எதுமறியாத குழந்தைபோல இருக்கிறாயே. உனக்கு என்ன ரோஷம் இல்லையா? நீ என்ன ஊமையா?" என்று கேட்டான். பார்வதிக்குக் கோபம்பிறக்க வேண்டும் என்பதற்காக அவன்பட்டபாடு கொஞ்சமல்ல.

"எனக்குவருகிற ஆத்திரத்திற்கு......" என்று ஆரம்பித்த பார்த்திபனுக்கு,

"என்னைக் கழுத்தைப்பிடித்து நெரித்துவிடலாமா என்று தோன்றும்" என்று பார்வதி சிரித்துக்கொண்டே பதில் கொடுத்தாள்.

"உன்னை எந்தக்கழுதை தொடுவான்" என்று தனக்குஇருக்கும் வெறுப்பைத் தெரிவித்துக்கொண்டான் பார்த்திபன். "என்சிறுவிரல் மேலேபட்டால் ஜென்மமே சாபல்யமாகும் என்றுகருதிய காலம் ஒன்றுண்டு" என்றுபழயகாலத்தை சாட்சிக்கு இழுத்தாள் பார்வதி.

"உன்னை ஒரு உத்தமி என்றுநான் நம்பியகாலத்தை மறந்துவிடு. அப்போது நான் ஒரு முட்டாளாக இருந்தேன்" என்றான் பார்த்திபன்.

"நான் எண்ணியது சரியாக இருக்கிறது" என்றாள் பார்வதி.

"என்ன எண்ணினாய்? என்ன சரியாக இருக்கிறது? என்று வெகுண்டு குதித்தான் பார்த்திபன்.

"காதல் கொண்டவர்கள் பித்தம்பிடித்தவர்கள்போல, ஏதேதோ பிதற்றுவார்கள் என்று எண்ணியிருந்தேன், அது சரியாகத்தான் இருக்கிறது" என்று பார்வதி, கூறினாள்.

"காதலா? எனக்கா? உன்போன்ற காதகியிடமா காதல்! காதலாம் காதல்! காலாடிகளுடன் கூடிக்கொண்டு கண்டபடி சுற்றித்திரியும் கள்ளியிடம் காதல் கொள்வதாம்! நான் யார் என்பதைத் தெரிந்துகொள்ளாது பேசுகிறாய். பார்வதி! நான் கொஞ்சமும் உன்னிடம் இரக்கம் காட்டப்போவதில்லை. நீ எவ்வளவுதான் காதல், காதல் என்று கதறினாலும், நான் கடுகளவு அன்பும் உன்னிடம்கொள்ளப்போவதில்லை." என்று வீரம்பேசலானான் பார்த்திபன்.

"விரக்திமார்க்கத்திலே நீர் இறங்கினால், நான் என்ன செய்யமுடியும்? இந்த உலகத்திலே எனக்கு ஒரு வேலையும் கிடையாது. என்மீது எவ்வளவு கோபம் இருந்தால்என்ன? நானாக, வலியஇங்கே வந்திருக்கிறேன். நீர் வாய்வலிக்கத் திட்டிய அவ்வளவையும், கோபமின்றிக்கேட்டுச்சகித்துக்கொண்டேன்.இவ்வளவுபொறுமையாக நான் இருப்பதற்குக்காரணம் என்ன? காதல்! அந்தப்பாழாய்ப்போன காதலுக்குக் கட்டுப்பட்டேநான்,ரோஷத்தையும் மறந்துநிற்கிறேன். நீர் என்னை உதாசீனம்செய்துவிட்டு, ஊர் திரும்பினால் என் உடலிலிருந்து உயிர் பிரிவது உறுதி. இதுபற்றித் தங்கட்குக் கவலையில்லாமற்போகலாம். ஆண்களின் நெஞ்சமே அப்படித்தான், கொஞ்சுவாளோ என்று கெஞ்சிக்கிடப்பார்கள் ஆனால் தஞ்சமென்றுவருபவர்களிடமோ நஞ்சுபோல நடப்பார்கள். உமதுபோக்கும் அதுவாகவே இருப்பின்நான் செய்ய என்னஇருக்கிறது" என்று பார்வதிகூறினாள். அந்தப்பேச்சிலே, பாகும் தெளிதேனும் கலந்திருந்ததோ என்னவோ, கோபமுற்றுக் குதித்துக்கொண்டிருந்த பார்த்திபன், அகலத்திறந்த கண்களுடன் நின்றான். பார்வதியின் கோபத்தைஅவன் எதிர்பார்த்தவனேதவிர, மோகங்கொண்டு தன்பாதத்தைப் பணிவாள் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை. குமாரிடம், முழு அன்புவைத்திருந்தாள் என்ற சந்தேகத்துக்காகவே, சதிபுரியவும் தயாரில்இருந்த பார்த்திபனுக்குப் பார்வதியின்போக்கும்மிக்க ஆச்சரியமாகஇருந்தது.

"பார்வதி!" என்று தழதழத்தகுரலிலே கூறினான், மேற்கொண்டு என்னபேசுவது என்றுபுரியாமல். ஒரு பெண்ணின் புன்னகை, ஆடவனின் மனதைப்படுத்தும்பாடு, அனுபவித்தவரேஅறிவான்றோ! பிறர் என்னகூறினும் அதன் முழுத்தன்மையைப் புரியவைக்கமுடியாது.

"பார்வதி!" என்று மீண்டும் கூவினான் பார்த்திபன்.

தாமரை மலர்ந்தது போன்ற முகத்துடன் விளங்கினாள் பார்வதி. முத்து வரிசைபோன்ற அவளுடைய பற்கள் கொஞ்சம் வெளியே தெரியலாயின, மறுவிநாடி பவழப்பெட்டிக்குள் சென்று பதுங்கிவிட்டன. உடலெங்கும் ஒரே சமயத்திலே பனிக்கட்டி விழுந்ததுபோலாகி விட்டான் பார்த்திபன்.

"நடப்பது கனவா? பார்வதி! என்னிடம் உனக்கு உண்மையாகக் காதலா? கடுகளவும் இராது என்றுதானே எண்ணினேன்"

"சூரியனுக்குத் தெரிகிறதா, தாமரை தன்னிடம் இலயித்தே மலருகிறது என்ற உண்மை. என் மேகத்துக்குத் தெரியுமா மயிலின் நடனத்துக்குக்காரணம், தன்னிடம்அப்பறவை கொண்ட காதல் என்று. தங்களுக்கு என்ன தெரியும் என்தாபம்"

"பார்வதி! நான் ஒரு முட்டாள். இது நாள்வரை உன்னைத்தெரிந்துகொள்ளாமலிருந்துவிட்டேன். உனக்குக் கேடுபல செய்தேன். உன்னைப்பற்றி மரியாதைக் குறைவாகவும் பேசினேன்"

"பதியிடம் பக்திகொண்ட பாவையர் இவைகளைப் பொருட்படுத்தமாட்டார்கள்."

"கண்ணே! உன் உண்மையான மனநிலையைத் தெரிந்துகொள்ளாமல், ஊரூராகத்திரிந்தேன், எங்கே சுகம் கிடைக்கும், எங்குசென்றால் நிம்மதி கிடைக்கும், எங்கேஆனந்தத்தை அணைத்துக்கொண்டு வாழலாம் என்று."

"சுகத்தைக் கண்டீரோ?"

"ஆஹா! இதோ!"

காதற்பேச்சு முடிந்தது, பார்த்திபன் "இதோ" என்று கூறிக்கொண்டே, அடக்கமுடியாத ஆவலோடு பார்வதியைத் தழுவிக்கொள்ள ஓடினான்.

"மன்னிக்கவேண்டும்!" என்றுகூறிக்கொண்டே அதேசமயத்திலே அந்த அறையின் கதவைத் திறந்துகொண்டு லேடி டாக்டர் லலிதகுமாரிநுழைந்தாள்.

[தொடரும்]

---

## முப்புரமும் மூண்டுவிட்டது.

நாஜியின் கொட்டத்தை அடக்க இதுபோது முப்புரமும் தீ மூண்டுவிட்டது. சோர்விலாச் சோவியத் வீரர்கள் பின்லாந்துமீது பாய்ந்தும் ருமேனியா பகுதியில் தாக்கியும், ஜெர்மன் படைகளைச் சிதறடிக்கிறார்கள். இத்தாலியிலே, ரோம் நகரைத்தாண்டி நேசநாட்டுப் படைகள் வேகமாகமுன்னேறிக்கொண்டேயிரண்டோடும் நாஜிப்படைகளை நையப்புடைக்கின்றன. நார்மண்டிப் பகுதியிலே பயங்கரமான தாக்குதல் நடந்தவண்ணம் இருக்கிறது. இவ்வளவோடு நிற்குமா, இன்னும் பல பகுதிகளிலேயும், போர்ப்புயல் வீசுமோ என்றபீதி, பெர்லினை வாட்டுகிறது. படுமனமேபடு என்றுரைக்கிறது உலகம்!

போர்க்களக் காதைகள்.

# கேன்-அன்றும், இன்றும்.

விக்டர்.

"தோளுந் தலையுந்
துணிந்து வேறுகிய
சிலைத்தோள் மறவர்
உடற்பொறை யடுக்கத்து
எறிபிணம் இடறிய
குறையுடற் கவந்தம்
பறைக்கட் பேய்மகள்
பாணிக் காடப்
பிணஞ்சுமந் தொழுகிய
நிணம்படு குருதியிற்
கணங்கொள் பேய்மகள்
கதுப்பிகுத் தாட"
[சிலப்பதிகாரம்]

பிணங்கள், சருகுகள்போலப் பறந்தன! கடலிலே பல உடலங்கள் மிதந்தன! கடற்கரையோரத்திலே, சவங்கள் வரிசை வரிசையாகக் காணப்பட்டன! வெண்மணல் செங்கிறமாகி விட்டது இரத்தக் குழம்பால்! இரத்தம், நெருப்பு, புகை, எங்குநோக்கினும். நார்மண்டி களக்காட்சி, காணப்பயங்கரமானதாகஇருந்ததென நிருபர்கள் கூறுகின்றனர். இவ்வளவு பயங்கரமான போராட்டத்திற்குப் பிறகு, நேசநாட்டுப் படையினர், 600 சதுரமைல் அளவுள்ள இடத்தைப் பிடித்திருக்கின்றனர்.

நார்மண்டி, பிரான்சின் வடபாகத்திலிருக்கும் பகுதி. மயிர்க்கூச்செறியும் பல நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடம். கடலோரத்திலே நின்று தூரத்தே கலம் வருவதைக் கண்டதும், ஊர்ச்சிறுர்கள் ஓடோடிச்சென்று, "வருகிறுர்கள் கடற்கொள்ளைக்காரர்கள்! வந்தது ஆபத்து" என்று மக்கள் அலறிய காலமொன்றுண்டு. நார்மண்டியிலேடேனிஷ்நாட்டவரும்நார்வே நாட்டவரும், கொலைக்கஞ்சாக் கடற்கொள்ளைக்காரராக இருந்தபோது, ஐரோப்பிய நாடுகளிற்பலவும், இங்கிலாந்தும் அஞ்சி அவர் அடிபணிந்து, காணிக்கை தந்து உயிர்ப்பிச்சை பெற்றதுண்டு. நார்வேநாட்டுக் கடற்கொள்ளைக்காரர் சூட்டியதே நார்மண்டி என்ற பெயர்!

ரோலோ என்றேர் கடற்கொள்ளைக்காரன். அவனுடலைச் சுமக்கும் ஆற்றல் எக்குதிரைக்கும் கிடையாதாம். எனவே அவன் நடந்தே செல்வானும்! அவனுடைய அட்டகாசத்தால் அழிய இருந்த சமயம், பிரான்சுநாட்டு மன்னன் சார்லஸ் என்பான், பெருநெருப்பெனத் தன்னை நோக்கிவரும், ரோலோவுக்குத் தன் மகள் ஜிஸ்லா என்பவளை மணம் புரிவித்துத்தந்ததுடன், நார்மண்டியை அவனுக்குக் காணிக்கையாகத்தந்தான். பிரான்சுநாட்டுப் பகுதி கடற்கொள்ளைக்காரனுக்கு 911ல் இனுமாகத் தரப்பட்டது.

மண்தந்து, மகளேயும்தந்து, மருகனுக்கிக்கொண்டும், சார்லஸ் மன்னன் மனநிம்மதிபெற முடியவில்லை. மருகனுன ரோலோ, சார்லஸ் மன்னனே மதிக்க மறுத்தான். மாமன்முன் மண்டியிடமுடியாது என்று கூறிவிட்டான்.

"ஐயனே! எமது அரசன்தந்த இடத்தைநீர் ஆள்கிறீர். நீர்மன்னனுனீர், அவரின் மருகனுனீர், அவரோ மன்னர்மன்னன்! அவர்முன் மண்டியிட்டு மரியாதையைத் தெரிவித்தலே முறை" என்றுசார்லஸ் மன்னரின் பிரதானியர், ரோலோவுக்குக் கூறினர்.

"அடிபணியும் பணிபுரிதல் வீரருக்கு ஏற்றதல்ல. அப்பணிக்கு ஒரு ஆள் தருகிறேன்" என்றுகூறிவிட்டு ரோலோ, தன் படையினரில் ஒருவனேச் சார்லஸ் மன்னன்முன், மண்டியிட்டு மரியாதை செலுத்தச் சொன்னுன்.

ரோலோவின் பணியாள், மண்டியிட்டான் பிரன்சு மன்னன் முன், அதே சமயத்திலே, மன்னனுடைய காலைப் பிடித்துத் தூக்கிக் கீழேவீழ்த்தினுன்!!

அரசஅவையிலே ஏற்பட்ட இந்தஅலங்கோலத்தை வரலாறு பொறித்திருக்கிறது. அவ்வளவு முரடர்கள் நார்வேநாட்டுக் கடற்கொள்ளைக் கூட்டத்தினர். அவர்களின் இடமாகச் சிலகாலம் நார்மண்டி இருக்கநேரிட்டது. வணங்காமுடியனுன ரோலோவுக்குக்கிடைத்த நார்மண்டியை, அவன்வழி வழிவந்தோர் ஆண்டுவந்தனர்.

* * * *

"பழத்திலே பகுதியைத்தருவர் பாலருக்கு! உனக்கு நார்மண்டியிலே ஒரு பாகத்தைத்தானே தந்துள்ளார் உன் தகப்பன். நீ, என்ன பரிபாலனம் செய்யத்தெரியாத பாலகனு? கேள்தம்பி! நார்மண்டிமுழுதும் நானே ஆள அனுமதி தருகஎன்று கேள், உன் தகப்பனுர் நிச்சயமாகத்தருவார்" என்று, ராபர்ட் என்ற வீரனுக்குப் பிரான்சுநாட்டு மன்னன்முதலாம்பிலிப்என்பான் போதித்தான். இது கேட்டு, ராபர்ட் என்பானின் கண்கள் ஒளிவிடக்கண்டதும், பிலிப் களிகொண்டான். எப்படியேனும் தந்தைக்கும் மகனுக்கும் விரோதத்தை வளர்த்துவிட்டு, இடையே, நார்மண்டியைத் தட்டிப் பறித்துக்கொள்ளலாம்என்பது பிரான்சுநாட்டு மன்னனின் எண்ணம்.

ராபர்ட், அதுசமயம் பிரிட்டனை வென்று அரசாண்டுவந்த வெற்றிவீரன் வில்லியம் என்பவனின் மகன். வில்லியம் நார்வே நாட்டவன், நார்மண்டி அதிபன். மகனுடைய வேண்டுகோளைக் கேட்ட வில்லியம், "படுக்கைபோகுமுன் உடையினைக்களையும்வழக்கம் எனக்குஇல்லை" என்று பதிலுரைத்தானும், அதாவது என்காலத்துக்குப்பிறகே நார்மண்டியின் ஆட்சிஉனக்கு, நானிருக்கும்வரை இல்லை என்று உணர்த்துவித்தான். மூண்டது போர் தந்தைக்கும் தனயனுக்கும்! பிரன்சுமன்னன் மகிழ்ந்தான். ராபர்ட்டுக்கு உதவிபலதந்தான். பிரன்சு மன்னன்தந்த ஒரு கோட்டையிலே பதுங்கிக்கொண்டு ராபர்ட் போரிட்டுவந்தான். ஒருநாள், ராபர்ட் கோட்டைவெளியிலே வருகையில், குதிரைவீரன்ஒருவன் எதிர்ப்படவே, வாளைஉருவினுன். வாட்போர் மும்முரமாக நடைபெற்றது. சளைக்காது போரிட்டனர் இருவீரரும். ராபர்ட், கடைசியிலே அந்தவீரனின் கரத்தை வாளால்தாக்கினுன், குதிரையிலிருந்து வீரன் கீழேவீழ்ந்தான், கதறினுன்.

"அப்பா! நீயா?" என்று அலறினுன் ராபர்ட்! கீழே வீழ்ந்தவன் தன் தகப்பன் வில்லியம் என்பதைத்தெரிந்துகொண்டு, தகப்பனுரின் நிலைகண்டான். தன்னைத் தானே நொந்துகொண்டான். குதிரை மீது தகப்பனுரை அமரவைத்து, அரசனின் ஆட்களை அழைத்து, அவர்களிடம் அவரை ஒப்புவித்தான்!

மகனுடைய மனப்போக்கு தகப்பனுக்கு மகிழ்வூட்டாதிருக்குமோ! சமாதானப்பேச்சு நடந்தது. மகனை அணைத்துக்கொண்டான் வில்லியம். தந்தை ஆளும் பிரிட்டிஷ் தரணிக்கும் ராபர்ட் சென்று சின்னுட்கள் தங்கியிருந்தான். மீண்டும், தந்தைக்கும் மகனுக்கும் பகை வளர்ந்தது. அதுபோது, பிரன்சுநாட்டு மன்னன், வில்லியம் மன்னனை நையாண்டிச் செய்தான், கோபம்கொண்ட வில்லியம், படையுடன்நார்மண்டிசென்று பிரன்சு நாட்டிலே போரிட்டான். பிரன்சுப் படைகள் சிதறின. நகரங்கள் பல தீக்கிரையாயின. மான்டிஸ் என்ற நகரிலே தீ! அதுசமயம், அங்குசென்ற வில்லியம், குதிரையினின்றும் இடறிக் கீழே வீழ்ந்தான், அதனுல் நோயுற்று, 1087ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9ந் தேதி நார்மண்டியிலே இறந்துவிட்டான். வெற்றிவீரன் வில்லியம் மன்னனின் உடலம், நார்மண்டியிலே, கேன் நகரிலே, செயின்ட்ஸ்டிபன்மாதாகோயில் மைதானத்திலே அடக்கம் செய்யப்பட்டது.

இதுபோது அதேகேன் நகருக்காகவே கடும்போர் நடைபெறுகிறது, நேசநாட்டுப்படைகட்கும் ஜெர்மன் துருப்புகளுக்குமிடையே.

# இசையும் வசையும்.

2ம் பக்கத் தொடர்ச்சி.

டினைப்போல உழைக்கின்றார்கள் என்பதை உங்களுக்கு முதலில் கூறினேன். ஆனால் அவ்வுழைப்பு வினைத்திறத்தோடு அமையவில்லை. மேலும் மனஎழுச்சியுமில்லை. இதற்குக் காரணம் என்ன? அறியாமைதானே! அவ்வறியாமையே கூட்டுறவு உணர்ச்சியையும் குலைத்துவிடுகின்றது. இன்று அறிஞர்கள் கூறுகின்றனர் மக்கள் கூடிவாழும் உணர்வுடையோராய் அறிவைப்பெருக்கி ஆற்றலை வளர்த்துத் தெரிந்துசெயல்புரியும் திறமையாளராய் மனஎழுச்சியோடு உழைத்துஉழைப்பின்பயனை உழைத்தவர் நுகரத்தக்கவண்ணம் செய்வதுதானே இசையாகும்! இந்நிலை எய்தாதமட்டும் வசைதானே! இவ்விசையை உண்டாக்குவது எவர் பொறுப்பு? மாணவர் பொறுப்பல்லவா? இளைஞர்கள் கடனல்லவா? சுறுசுறுப்பும் மனக்கிளர்ச்சியும், காரணகாரியத்தை ஆராய்ந்தறியுமியல்பும், எடுத்தசெயலை இனிதே நிறைவேற்றவேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியும் இளமைக்குரிய பண்புகள் அல்லவா! ஆதலால், இவ்விழிநிலையைத் துடைக்கவல்லஇளமைபொருந்திய திராவிட மாணவர்களே! முதலில் உங்கள் அறிவைப் பெருக்குங்கள், அவ்வறிவை நாட்டுக்குப் பயன்படுத்த எண்ணுங்கள். அவ்வெண்ணத்தோடு நீங்கள் கற்கும் கல்வியறிவே இந்நாட்டின் எதிர்கால நல்வாழ்விற்கு நீங்கள் இப்பொழுது செய்யவேண்டிய கடமையாகும். ஒரு நாட்டிற்கு இசையைத்தரும் ஆற்றல் இளமைக்குத்தான் உண்டு] என்பதை எவரும் மறுத்தற்கியலாது. இந்நாடு நன்னிலை எய்துதற்கு ஏற்றவகைகளை நாம் புதியனவாக வகுக்கவேண்டும் என்பதை மனம்கொள்ளவேண்டும். எதிர்கால வாழ்விற்கு இறந்தகாலத் தமிழ் நூல்கள் வழிகாட்டும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. பழந்தமிழ் நூல்களெனப் பாராட்டிப்பேசப்படும் பற்பலநூற்களிலும் பற்பல வகையான மாறுபாடுகளையும் நாம் காணுகின்றோம். இதற்கு ஒழுங்கு நூல்போன்ற சிலவேண்டுமாயின் விதிவிலக்காகுமேயன்றி ஏனையயாவும் மாறுதலுக்கு உள்ளானவைகளேயாம்.

தோழர்களே! நாகரிகத்தில் முதிர்ந்த கலைகளில் வல்ல அறிவுடைய ஒருவன் தன்னாட்டில் தனக்குரிமையான வீட்டில் பல ஓவியங்களும் சிற்பங்களும் ஒளிசெய்ய, மனைவிமக்களோடு இனிதே வாழ்ந்து வந்தான். அவன்விருந்தினரைப் பேணுதலில் தவறாதவன். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கொள்கையினையுமுடையவன். எங்கிருந்தோவந்த ஒருவன் எதிர்ப்பட்டான் அவன் முன்பு. ஐயோ! எனக்கு இடமில்லையே! யான் எங்குவாழ்வேன். நீ உதவிசெய்யாயோ என்று பரிதாபத்தோடுகேட்டான். மனம் இளகியது. உனக்கு இடம் உண்டென்றான் மனையிலுள்ளவன்; இவ்விடமும் இங்கேயே உண்டு என்றான். இதோ வீடு இவ்வீட்டின் மேற்பாகத்தே இனிதே வாழ். நான் கீழேயிருக்கின்றேன் என்றான். வந்தவன் மகிழ்ந்தான். அன்றேவேலையைத்தொடங்கினான் அவனைப்போல நாமும் வாழவேண்டும் என்று ஆசைப்பட்டான். ஓவியத்தையும் சிற்பத்தையும்கண்டு உள்ளம் பொருமினான். ஏன்? நாமும் அவ்வாறு ஏன் ஆக்குதல்கூடாது என்று நினைத்தான். கீழ் வீட்டிலுள்ள ஓவியத்தைமனதில்எண்ணி எண்ணிமேல் வீட்டிலும்பலஓவியங்களைத் தீட்டினான். பல சிற்பங்களைக் கொண்டு குவித்தான் ஆனால் அவைகள் முற்றும் மாறுபாடாக அமைந்துவிட்டன என்பதை அவன் அறியாமலில்லை. ஓவியத்தையும் சிற்பத்தையும் பெருக்கிக்கொண்டேபோனான். பொருளின் பெருக்கமும் காலத்தின் ஓட்டமும் கட்டிடத்தையே அதிர்ந்து விழச்செய்தது. கீழ்மேல் ஆகிய இருவேறான ஓவியங்களும் சிற்பங்களும் ஒன்றுபடக் கலந்தன, கலந்ததுமட்டுமல்லாமல் அவற்றுள் பல ஓவியங்கள் சிதைந்து போய்விட்டன. பலசிற்பங்கள் மூக்கும் விழியும் முறிந்துபோய்விட்டன. இவ்வாறு சிதைந்த, உருக்குலைந்தஓவியங்களையும் சிற்பங்களையும்கொண்டு அவற்றின் உண்மை வடிவை நாம் இப்போழுதுகாண முடியுமா? அவ்வோவியங்களும் நமது பழந்தமிழ் இலக்கியத்திற்கும் இலக்கணங்களுக்கும் ஒப்பானவைகளாகும். உருச்சிதைந்த இலக்கியமும் இலக்கணமும் நம்மெதிர்கால வாழ்விற்கு வழிகாட்டுவதொருபுறமிருக்க அவற்றின் உண்மைநிலையை நாம் அறிந்துகொள்வதெவ்வாறு? அத்தகைய நூல்கள் நமக்கு வழிகாட்டுவனவாகாவென்று ஏற்படுமாயின் அத்தகைய நூல்களிலேயேமனம்அழுந்தி அவைகளே உண்மையான பழந்தமிழ் நாட்டு நூல்களென நம்பிப், பேசிக் கற்பித்துவரும் புலவர்கள்தாம் நமக்கு வழிகாட்டியாவார்களா? பலகலப்பிற்கு உள்ளாகிய நூல்களும் அவற்றை பரப்பவேண்டும் என்ற உணர்வுடைய புலவர்களும் நமக்கு நம் நல்வாழ்விற்கு—ஒரு காலத்தும் வழிகாட்டியாய் இருக்கமுடியாது என்பதை நாம் என்றும் மறந்துவிடுதல்கூடாது.

தோழர்களே! இன்று இங்குபல திராவிட நாட்டுத்தலைவர்களைக் காணுகின்றேனாதலால் எனதுசிறியவேண்டுகோளோடு எனது சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். நம்நாட்டில் பல செய்தித்தாள்களும் பலவிரிவுரைகளும் பலகாலமாக நடந்து வருகின்றன. ஆனால் நாம் எதிர்பார்க்குமளவிற்கு அவைகள் பயனளிக்கவில்லை. ஓரளவு பேச்சும் தாளும் அறியாமையை ஒழித்துவருகின்றது என்றாலும், பகுத்தறிவென்னும் ஒளிஇன்னும் நன்கு வீசவில்லை. அவ்வொளி வீசுதற்கு இதுவும் ஒரு வழியாகுமா எனஎண்ணுங்கள். பொதுவாகப் பாடத்திட்டங்களில்-பகுத்தறிவுக்கான முறையிலே நூல்கள் சேர்க்கப்படவேண்டும் என்ற கிளர்ச்சி செய்வது ஒருபுறம் இருப்பினும் தனியேபகுத்தறிவுக்கழகம் ஒன்று தொடங்கவேண்டுமென்பது எனது வேண்டுகோளாகும். அக்கழகம் சொல்வன்மையுடைய இளைஞர்களைத் தெரிந்தெடுத்து உண்டியும் உடையும் நல்கி 5-6 ஆண்டுதிட்டத்தோடு அறிவுபுகட்டிப் பட்டதாரியாக்கி வெளிப்படுத்துமாயின் அவ்வாறு வெளிவருகின்றவர் ஆண்டுக்குக்குறைந்தது பதின்மாராக இருப்பினும் அவர்களால் எவ்வளவு பெருநன்மை விளையும் என்பதை எண்ணிப்பாருங்கள். இதற்கு நம் தலைவர்கள் எண்ணி நலமெனக்காணின் ஆவன செய்ய விழையுமாறு வேண்டிக்கொண்டு உங்கள் அனைவருக்கும் எனவணக்கத்தைக் கூறி, என்சிற்றுரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.


## அன்பர்களுக்கோர் அறிவிப்பு.

**மேளக் கச்சேரிகளுக்கோ, அல்லது ஊர்கோலங்களுக்கோ தனித் தவுல் வைக்கவிரும்புவோர் கீழ்கண்டவிலாசத் திற்கு எழுதித்தெரிந்துக்கொள்ளவும்.**

பால நந்தீஸ்வர பூஷண

தவுல்

என். பி. **இராகவன்,**

நாச்சியார் கோவில்,

கும்பகோணம்.


## தமிழ்த் திருமணம்.

சிதம்பரம் நீதிமன்றத்தலைவர் திரு. அ. கஜபதி நாயகர் அவர்கள் திருமகளார்-திலகவதி அம்மைக்கும், த. இரங்கசாமி நாயகர் திருமகனார் தேவராஜனுக்கும் 1—6—44 வியாழன் காலை சிதம்பரம் மணமகள் இல்லத்தில், திருமணச்சடங்கு விளக்கம்எனத் தமிழ்முறையாக ஒருசிறு நூல் அச்சேற்றியாவர்க்கும் வழங்கிஅதன் படி, தமிழரையே ஆசானாகக்கொண்டு, வடமொழியோ, ஆரியமோ சிறிதும் கலப்பின்றி கொள்கை அழுத்தமாகவும் முறைகள் எளிதாகவும் திருமணம் நடத்தினார்கள். காஞ்சி பங்கீட்டு அலுவலர் திரு. கி. இராமலிங்க முதலியாரவர்கள் அன்புசால்வாழ்த்திதழ் வாசித்தளித்தது குறிப்பிடத்தக்கது. மணமக்கள் சார்பில் திருமண நன்கொடையாக திராவிட நாட்டுக்கு ரூ. 5. வழங்கப்பட்டது.

# இனி நாம் செய்யவேண்டுவது யாது?

D. V. நாராயணசாமி

கலையிழந்து நிற்கும், திராவிடத்தின் கதியினை உயர்த்திட பெரியார் ஈ. வெ. ரா. செய்துவரும் பெருந்தொண்டினுல் இன்று நாட்டிலே இனஎழுச்சி கொந்தளித்துக்கொண்டிருக்கிறது. இலட்சியமே உயிர் எனக்கருதும் இளைஞர் கூட்டம் இயக்கத்திற்கு அரணாக விளங்கி வருகின்றது. வருங்காலத் தலைவர் குழாம் எதிர்கால ஆக்கவீரர்கள் எனக்கூறத்தகும், மாணவமணிகளும் அணிஅணியாக வந்துகொண்டிருக்கின்றனர், மாநாடுகள் பல நடக்கின்றன. கூட்டங்களும் பலப்பல. ஆங்கு குழுமியுள்ளோர் அனைவரும் இரத்தத்துடிப்புள்ள இளங்காளைகள், புரட்சிகரமான தீர்மானங்களைச்செய்கின்றனர். இனம், நாடு, மொழி, என்பதே அவர்கள் பேச்சு, மூச்சு, உயிர், "திராவிடநாடு திராவிடருக்கே" என்று பெரியார் எழுப்பிய பேரொலி அவர்தம் இளஉள்ளங்களிலே, அச்சடித்தாற்போன்று பதிந்துவிட்டது. தீர்ந்தது ஆரியம். அதனுடைய அழிவுச்சின்னம் தெளிவாகத் தெரிய ஆரம்பித்துவிட்டது. எதிர்ப்பு அதிகமாகி வருவதைக்கண்டு ஆரியம் அலறுகிறது என்றெல்லாம் இற்றைநாளில் தோழர்கள் உணர்ச்சியுடன் கட்டுரைகள் தீட்டிடக்காண்கிறோம். நாட்டுப் பிரிவினைக் கொள்கையின், நலத்தினை மேடைகளிலே எடுத்துப்பேசிடக் கேட்கிறோம். நமது திராவிடநாட்டுப் பிரிவினை அசைக்கமுடியாத ஆதாரங்கள்கொண்ட தத்துவம், எதிரிகள் கண்டு அஞ்சுகின்றனர். நமது இலட்சிய வளர்ச்சி அவர்களை வேதனையிலே ஆழ்த்தியிருக்கிறது. ஆம்! உண்மை! ஒவ்வொரு திராவிட வாலிபனும் இந்நிலையைக் கண்டு உளம்பூரிக்கிறான். ஆயின் அதே நேரத்திலே, ஆரியத்தின் அகமகிழ்ச்சியும் சந்தடியற்றுப் பொங்கி வழிய ஆரம்பித்திருக்கின்றது என்பதை பற்றிச் சிறிது சோகம் உண்டாகிறது.

நம்தலைவர்கள். நம்கட்சியார் என்று விளம்பரம்பெற்றிருக்கும் ஒருசில அன்பர்கள் ஆரியத்தின் அகமகிழ்ச்சிக்கு இலக்கியமாக, விளங்கிவருவது மட்டுமல்ல, ஆரியச்சேட்டை, இந்நாட்டிலே, மேலும் மேலும், மலிந்துவர, அந்த ஒருசிலர், சேனாதிபதிகளாகவும், விளங்குகிறார்களெனில், திராவிடத் தோழன் சோகிக்காமல் என்ன செய்யமுடியும்?

கம்பஇராமாயணம் ஆரியதிராவிடப் போராட்டக்கதை அது திராவிடனை இழிவுபடுத்தும் நூல், மக்களை மதியற்றவராகஆக்கும்ஆபாச இதிகாசம் ஆதலின் அதனை வெறுத்துத்தள்ளுங்கள் கொளுத்துங்கள் கண்டனத்தைக்காட்ட என்பது, பெரியாரின் பெருமுழக்கம்.

கம்பஇராமாயணத்தை ஒருசிலர் இன்று, கொளுத்தவேண்டுமென்று அறியாமையினுல் கூறிவருகிறார்கள். அதிலுள்ள கலையழகு அவர்கட்குத் தெரியவில்லை. தமிழரின் பண்பைக்கம்பன் அப்படியே அதிலே சித்தரித்துள்ளான். கம்பன்வேண்டுமா? தமிழ்நாடுவேண்டுமா? என்றால் கம்பன்தான்வேண்டும். அவருக்காக விழாக்களும் நடாத்துவோம் என்பது, நம்முன்னே இருந்துகொண்டு நம்மவர்கள்எனச் சொல்லிக்கொள்ளும் சிலரின்போதனை. இந்நிலை ஆரியத்தின் அகமகிழ்ச்சியை வளர்க்காது என்னசெய்யும்?

எங்குநோக்கினும் திராவிடர் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. எத்திக்குத் திரும்பினும் திராவிடநாட்டு உரிமை முழக்கம் எதிரொலிக்கின்றது. இதனை எடுத்துரைக்க, நாட்டிலே, நமக்கு நல்ல தினசரிப் பத்திரிகைஇல்லை. எதிரிகள் நான்கு தமிழ்த்தினசரிகளை வைத்திருக்கின்றனர். ஒன்றுகூட திராவிடருக்கு இல்லையே என்பது திராவிடத் தோழரின் குறைபாடு. ஆனால் நமது தலைவர் கூட்டத்தைச் சேர்ந்த, திராவிடஇயக்கத்தில் முக்கிய உறுப்பினராக உள்ள, ஒருவர், திராவிடக்கொள்கைகளுக்கு நச்சுப்போன்ற, காந்தீயத்தை வளர்க்கும் ஓர் தினப்பத்திரிகை இந்தயுத்த நெருக்கடியில், வெளிவர உதவிசெய்து அதுநாட்டிலே உலவப் பார்க்கிறோம். இந்நிலை ஆரியத்தின் வளர்ச்சிக்கு அடிகோலாது என்னசெய்யும்?

பெரியார் சொல்லும் திராவிடநாட்டுப்பிரிவினை, சரியானது, நாம்திராவிடர் என்ற இனஉணர்ச்சிகொண்டு விடுவோமானல், தமிழிசை இயக்கம்போன்றவை தானகவெற்றி பெற்றுவிடும், என்று எமக்கு நீதிக்கட்சி மாநாடுகளிலே அழகாகப்பேசத்தெரியும். நமது திராவிடஉரிமைகளை நசுக்கத்தோன்றியுள்ள எதேச்சாதிகார காந்தீயத்தை உறுதிசெய்ய உதவும், கஸ்தூரிபாய் நிதிதிரட்டிடவும் தெரியும் என்று செயலிலேகாட்டிடும் ராஜகுமாரர்கள் நம்மிடையே வாழும்போது ஆரிய அகமகிழ்ச்சி பொங்கிவழிவதோடு நிற்கப்போவதில்லை. அது ஆனந்தத்தாண்டவம்கூட ஏன் செய்யாது? புராணங்கள் தமிழரின் தன்மானத்தை, அறிவைப்பாழ் செய்கின்றன. அதுசம்பந்தமான கதாகாலட்சேபங்களோ, நாடகங்களோ, இசையரங்கு, கலையுணர்ச்சிகளோ, மக்களுக்கு மகத்தானகேடுபயக்கக்கூடியவை, அதனை ஒதுக்கித் தள்ளுக, எனத்தன்மானத் தந்தை பெரியாரும் அன்னாரைப்பின் பற்றுவோரும், பேசிக்கொண்டிருக்கும் நாளிலே, பெரியார் இருக்கும் கட்சியிலே நானும் ஓர் தலைவன் எனக்குந்தியிருப்போர், பரமசிவன் அருள்புரியவந்துவந்து போகும்நாடகங்களுக்குச் சென்று, தமிழருக்கும் தமிழுக்கும் இவற்றால் விளையும் பயன்அளவிடமுடியாது, என்றுகூறிநான் இதைக்கண்ணுற்று மகிழ்ந்து; நூற்றுக்கணக்கான ரூபாய்கள் பெறுமான வெள்ளிக்கோப்பையை மனமுவந்து அளிக்கிறேன் என்று புராணத்தன்மைக்கு, ஆதரவளித்து வந்தால், இத்தன்மையோரை, ஆரியச்சேனாதிபதிகள், ஆரியத்தைஅழியவிடாது பாதுகாக்கும் உத்தமப்பிரதிநிதிகள், என ஏன் சொல்லக்கூடாது? நமது இயக்கத்தால், பலனே [illegible], அடையாதவர்கள், எதிர்க்கட்சியாளர்கள் என்னசெய்தாலும் நமக்குக்கவலையில்லை. புரோகிதக் கூட்டத்தின் ஆரவாரமான எதிர்ப்பினாலும், கவலையில்லை. வேதனையும் இல்லை மாறாக மகிழ்ச்சியே பிறக்கிறது. நம்மவர், நம்மை நடத்திச்செல்வோர், நமது இயக்கத்தால் பெருமதிப்புப் பெற்றவர்கள், என்றவரிசையிலே நிற்போர், காந்தீயத்தைக் கொழுப்பும், தளிருமாக வளரச்செய்யும், கஸ்தூரிபாய் நிதிக்கமிட்டிகளுக்குத் தலைமைவகிப்பதென்றால், திராவிடஇயக்கம் வாழவேண்டும் எனத்துடித்து நிற்கும் வாலிபஇரத்தம் கொதிப்படையாதா?

65 ஆண்டுகள் நிரம்பிய பெரியார் இராமசாமி அவர்கள் தனதுபொன்னான உடல் நலத்தைக்கூடக் கவனியாது, ஊர் பலசுற்றி, உழைத்ததின்பயனாக ஏற்பட்டுள்ள இனஎழுச்சி இயக்கத்திலே, எதிரிக்குக்கங்காணிகளாக விளங்கும் பொறுப்பற்றவர்களும், காந்தீயக்காவலர்களும், தலைவர்களாக விளங்கிவருவார்களானல், அப்போலிகளைக்காணும், திராவிட நாடுபெற உயிர்த்தியாகம் செய்யச் சித்தமாயிருக்கும் திராவிட இளைஞரின் உள்ளங்கள் துடிதுடிக்காதா? தோழர்களே! இளைஞர்கூட்டம் தன்மானஉணர்வோடு பிரிவினைத்திட்டத்திலே பெருநம்பிக்கைகொண்டு, இலட்சியப் பாதையில் விரைந்து சென்றுகொண்டிருக்கையில், அதனைச்சிறிதும் எண்ணிப்பார்க்காது, உயிரினும் மேலான இலட்சியத் தன்மையை அடகுவைக்கும், இத்தகைய போலித்தலைவர்கள் உலவுகின்ற நிலையிலே, இனிநாம் செய்யவேண்டுவது யாது என்பதைச்சிந்திக்கவேண்டியது இன்றியமையாதது. பாலுக்கும் காவல்! பூனைக்கும் தோழன்! ஆற்றிலே ஒருகால்! சேற்றிலே ஒருகால்! என்ற நிலையிலே வாழுவோரை, ஒருநிலை அடையச்செய்தாலன்றி நமது இயக்கம்வளருமென்று கருதுவதற்கில்லை. ஆகவே ஆரியம் அழிய இனிநாம் செய்யவேண்டுவதுயாது? என்னும் கேள்வியை எழுப்பி, இனஎழுச்சிக்கு ஊறுவிளைவிக்கும் போலிகளை விரட்டவேண்டுவதே, நாம் செய்யவேண்டுவது எனத்துணிவீர்களானல் திராவிட இயக்கம் ஆக்கமுறும் எனக்கூறவும் வேண்டுமா?

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.